**கவனிக்க.**- 2016.09.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1985 - 2016 සැප්තැම්බර් මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.09.15

*1985 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 160 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | | |


**கவனிக்க.**- விலங்குத் தீனி ( திருத்தம்) சட்டமூலம் 2016, யூன் மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016,செத்தெம்பர் மாதம் 23ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பி.கே.எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## அல்- கிம்மா மன்றத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

எம். எஸ். தௌபீக் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 48(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் “அல்- கிம்மா மன்றத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்” எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக்குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தினைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

1. சிறார்களின் கல்வியை மேம்படுத்துதல்;
2. இனங்களுக்கிடையில் சமாதானத்தை வளர்த்தல்;
3. வறிய மக்களின் சுய தொழில்களுக்கு உதவுதல்,

பிறவும்.

எம்.எஸ். தௌபீக்,
பாராளுமன்ற உறுப்பினர்,
தேசியப் பட்டியல்.

9-500

---

## மேல் மாகாண மேல் நீதிமன்றம் (கொழும்பில் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகித்தல்)

H.C.(Civil) வழக்கிலக்கம்: HC (CIVIL) 28 /2016 (CO)

இலக்கம் 27 A, பெபிலியான வீதி, நுகேகொடை என்ற முகவரியில் பதிவு செய்த அலுவலகத்தைக் கொண்ட இன்டர்நெஷனல் புட்ஸ்டப் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் (International Foodstuff Co. Pvt. Ltd) நிறுவனத்தை ஒடுக்குவதற்கான விடயம் தொடர்பானது

Yusen logistics & Kusuhara Lanka( Pvt) Ltd. இலக்கம் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10

மனுதாரர்

மேல் மாகாண மேல் நீதிமன்றத்தினால் (கொழும்பில் நடைபெறுகின்ற) அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்காக, இலக்கம் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்ற முகவரியைச் சேர்ந்த Yusen logistics & Kusuhara Lanka( Pvt) Ltd நிறுவனத்தினால் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி குறிப்பிட்ட நீதிமன்றத்துக்கு ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது என இத்தால் அறியத்தரப்படுகின்றது. அத்தோடு அத்தகைய மனுவை 2016, நவெம்பர் 30 ஆந் திகதி நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படவுள்ளது என்பதோடு சொல்லப்பட்ட மனு தொடர்பில் ஒரு கட்டளையை வழங்குவதில் ஆதரவளிப்பதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்புகின்ற சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன் கொடுனர் அல்லது பங்களிப்பாளர் தனிப்பட்ட முறையில் அல்லது அவரது சட்டத்தரணி மூலம் சொல்லப்பட்ட மனு மீதான விசாரணை நடைபெறுகின்றபோது தோன்றலாம் என்பதோடு அத்தகைய நோக்கத்திற்காக சொல்லப்பட்ட மனுவின் பிரதியொன்றை சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன் கொடுனர் அல்லது பங்களிப்பாளருக்கு பெற்றுக் கொள்வதற்கு அவசியமாக இருந்தால் அதற்காக குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் கீழே கையொப்பமிடுகின்ற நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும்.

கையொப்பமிட்ட நிறுவனம்

F.J.& G.De Saram, சட்டத்தரணிகள்,
இல.216, டி சேரம் பிளேஸ்,
கொழும்பு 10.

**குறிப்பு**.- சொல்லப்பட்ட மனு தொடர்பான விசாரணையின் போது தோன்றுவதற்கு விரும்புகின்ற எவரேனும் ஆள் அவர் பங்குபற்றுதல் தொடர்பாக எழுத்து மூலம் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணிகள் நிறுவனமான F.J.& G.De

Saram என்ற நிறுவனத்திற்கு சேர்ப்பிக்க அல்லது தபாலிட வேண்டும். அத்தகைய அறிவித்தலில் ஆளின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட வேண்டும் அல்லது ஒரு நிறுவனமாயின் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிட வேண்டும் என்பதோடு அதனை குறிப்பிட்ட ஆளினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரின் அல்லது நிறுவனத்தின் (எவரேனும் இருந்தால்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட்டு சேர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லது தபாலிலிடப்படுமாயின் 2016, நவெம்பர் 29 ஆந் திகதி பி.ப.6.00 மணிக்குப் பிந்தாமல் ஒரு போதிய நேரத்தில் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிகள் நிறுவனத்திற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

9-604